கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.328/2014** தேதி: **18.09.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (சரளா, க/பெ.குமாரசாமி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் முன்பாகவே வாக்குமூலம் தாக்கல் செய்து என்னை குறுக்குவிசாரணை செய்யதார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 3 வருடமாக எனது குடும்பத்தில் பாக பிரிவினை சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் எனக்கு தெரியாது.
2. அசல் வழக்கு எண்135/ 2003 ல் நடைபெற்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வில்லங்கத்தில் நீதிமன்ற வழக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. நான் வாங்கும் போது வில்லங்கத்தில் எந்த பிரச்சனையும் இல்லை.
3. 2000 ல் இருந்து அந்த குடும்பத்தில் பாக பிரிவினை வழக்கு உள்ளது என்று ஊரில் அனைவருக்கும் தெரியும் என்றாலும் நான் தெரிந்தேதான் கிரையம் பெற்றேன் என்றாலும் சரியல்ல. பாகம் பிரியாத சொத்தை கிரையம் பெற்றால் அது செல்லாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனவே நான் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. நான் பவர் ஏஜன்ட் வள்ளி என்பரிடம் இருந்து தான் கிரையம் பெற்றேன்.
4. அங்கமுத்து என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து முதலாவதாக அங்கமுத்துவிற்கு பாத்தியமாகி பிற்பாடு

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.09.19 05:17:46
+0530

அவரது பிள்ளைகளுக்கு சொந்தமானது அதன் பின்பு அவரது வாரிசுகளுக்கு பாத்தியமானது என்றால் எனக்கு அவர்களது பூர்வீகம் தெரியாது. அந்த வாரிசுகளில் ஒரு பகுதியினர் தான் வள்ளி என்பவருக்கு பவர் கொடுத்துள்ளனர் என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது.

5. 7 முதல் 10 பிரதிவாதிகளான ராஜாராமின் பிள்ளைகள் தான் பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு முறையாக பாகம் பிரியாத சொத்தினை அவர்கள் விற்றுள்ளதால் இந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

6. பிரதிவாதிகள் பாக பிரிவினை வழக்கு அசல் வழக்கு 135/2003 தாக்கல் செய்து முதல் நிலை தீர்ப்பனை மற்றும் இறுதி நிலை தீர்ப்பனை மற்றும் ஓப்புதலும் பெற்றுள்ளதால் நான் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு 135/2003 மீது யாரும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். எனவே என்னுடைய கிரையம் முறையாக செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று . மறுவிசாரணை இல்லை.

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.09.19 05:17:52
+0530